ஏர் இந்தியா விமானங்கள் சவூதி அரேபியாவுக்கு அக். 24 வரை ரத்து

புது தில்லி, அக். 17: மேற்காசியாவில் அதிகரித்துவரும் பதற்றம் காரணமாக, சவூதி அரேபியாவுக்கான விமான சேவைகளை அக்.24-ஆம் தேதி வரை ஏர் இந்தியா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனங்கள் ரத்து செய்துள்ளன.

ஜெட்டா, ரியாத், தம்மாம் ஆகிய நகரங்களுக்கான விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ஏர் இந்தியா நிறுவனம் சனிக்கிழமை எக்ஸ் தளத்தில் தெரிவித்தது. நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், பயணிகளுக்கு இயன்றவரை தேதிகளை மாற்றிக்கொள்ளும் வசதிகளை வழங்குவதாகவும் அந்த நிறுவனம் கூறியது.

முன்னதாக, ஏர் இந்தியா தனது சேவைகளை அக். 20-ஆம் தேதி வரையும், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் அக்.17-ஆம் தேதி வரையும் ரத்து செய்திருந்தன. இண்டிகோ நிறுவனம் வியாழக்கிழமை தனது விமான சேவை ரத்தை அக். 24 வரை நீட்டித்தது. ஆகாசா ஏர் நிறுவனம் ரியாத் நகருக்கான சேவைகளை அக்.24 வரையும், ஜெட்டாவுக்கான சேவைகளை அக்.21 வரையும் நிறுத்தி வைப்பதாக அறிவித்தது.

சவூதி அரேபியாவில் ரியாத் விமான நிலையம் உள்ளிட்ட பொது மக்கள் பயன்பாட்டு உள்கட்டமைப்புகளைக் குறிவைத்து யேமனின் ஹூதி கிளர்ச்சிப் படையினர் தாக்குதல் நடத்தி வருவதாகக் கூறப்படும் நிலையில், மேற்கசியாவில் பதற்றம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விமான நிறுவனங்கள் சேவைகளைத் தற்காலிகமாக ரத்து செய்துள்ளன.

கடற்படைகள் கூட்டுப் பயிற்சி...



பிரிட்டனின் பிளிமத்தை ஒட்டிய கெல்டிக் கடற்பகுதியில் இந்திய, பிரிட்டன் கடற்படைகளிடையேயான கொங்கண்-26 கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்ட இந்தியாவின் ஐஎன்எஸ் திரிசூல், பிரிட்டனின் எச்எம்எஸ் சதர்லண்ட் போர்க் கப்பல்கள்.

அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களைக் காக்க வேண்டும்

இளம் வழக்குரைஞர்களுக்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி வலியுறுத்தல்

பெங்களூரு, அக்.17: சட்டப் படிப்பை முடித்த மாணவர்கள் நீதியை நிலைநாட்டவும், தனிநபர் சுதந்திரத்தை பாதுகாக்கவும், அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களைக் காக்கவும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் வலியுறுத்தினார்.

பெங்களூரில் சனிக்கிழமை நடைபெற்ற இந்திய தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் 34-ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, பட்டத்தேர்வுகளில் சிறப்பிடங்களை பெற்றவர்களுக்கு பதக்கங்கள், சட்டப் பட்டப் படிப்பை முடித்த மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி, அவர் பேசியது:

சட்டக் கல்வி என்பது குற்றவியல் சட்டம் அல்லது அரசமைப்புச் சட்டத்தின் கோட்பாடுகளைக் கற்றுக்கொள்வதுடன் முடிந்துவிடுவதில்லை. நம்மிடம் இருந்து மாறுபட்ட கண்ணோட்டங்களை கொண்டவர்களைச் சந்தித்து, அவர்களின் பார்வைகளை புரிந்துகொள்வதில்தான் சட்டக் கல்வியின் உண்மையான நோக்கம் அடங்கியுள்ளது.

சட்டத் தொழில் என்பது மனஉறுதி குறைந்தவர்களுக்கானதல்ல. சட்டங்கள், முந்தைய நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவது மட்டுமன்றி, நீதியை நிலைநாட்டுவதற்கான துணிவும், பெரும்பாலும் கவனிக்கப்படாமல் போகும் மக்களின் குரல்களை காது கொடுத்து கேட்கும் பணியும் இத்தொழிலுக்கு அவசியம்.



பெங்களூரில் சனிக்கிழமை நடைபெற்ற இந்திய தேசிய சட்டப் பல்கலைக்கழக பட்டமளிப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த். உடன் கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார்.

வெவ்வேறு கருத்துகளைக் கேட்டு ஆராய்ந்து, அதன் பின்னரே முடிவெடுக்க வேண்டும். தனிநபரையும் அவரது கருத்தையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். கருத்து வேறுபாடு கொண்டவர்களின் கண்ணியத்தை குறைக்காமல், அவர்களுடன் உடன்பட மறுக்கவும் தெரிந்திருக்க வேண்டும். இதுவே அறிவுசார் சுதந்திரத்தையும் நியாயமான அணுகுமுறையையும் வெளிப்படுத்துகிறது.

சட்டம் என்பது நிலையான ஒன்றல்ல. அதை பயிற்சி செய்யும் வழக்குரைஞர்களின் சிந்தனைகள், செயல்பாடுகள் ஆகியவற்றின் வழியாக அதுதொடர்ந்து வளர்ச்சியடைகிறது. வாதிடப்படும் ஒவ்வொரு வழக்கும், தயாரிக்கப்படும் ஒவ்வொரு ஒப்பந்தமும், வழங்கப்படும் சட்ட ஆலோசனையும், எழுதப்படும் ஒவ்வொரு தீர்ப்பும் நாட்டின் நீதி அமைப்பை வலுப்படுத்துகின்றன.

சட்டப் பல்கலைக்கழகத்தில் நீங்கள் செலவிட்ட ஆண்டுகள், இத்தொழிலின் சிக்கல்களை எதிர்கொள்ள உங்களை தயார்படுத்தியுள்ளன. அறிவுசார் நெகிழ்வுத்தன்மையுடன், அறநெறிப் பொறுப்பையும் அழுத்தங்களைத் தாங்கும் மன உறுதியையும் இணைத்து செயல்பட வேண்டும். உங்கள் கொள்கைகளை வசதிக்காக ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளாதீர்கள். தொழில் வாழ்க்கையில் குறுக்கு வழிகளை தேடாதீர்கள்.

நேர்மையை தொடர்ந்து கடைப்பிடிப்பதே உங்கள் தொழில்முறை நற்பெயரை உறுதிப்படுத்தும். சில நேரங்களில் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழலாம்; அவசரமாக செயல்படுவதற்கான தூண்டுதல்கள் ஏற்படலாம்; மற்றவர்கள் எளிதான குறுக்கு வழிகளை தேர்ந்தெடுக்கலாம். அத்தகைய தருணங்களில், இந்த சிறந்த கல்வி நிறுவனத்தில் நீங்கள் கற்றுக்கொண்ட விழுமியங்களை வழிகாட்டியாக கொண்டு, அவற்றுக்கு உண்மையாக இருக்க வேண்டும்.

சட்டத்தொழிலில் ஈடுபடுவதன் மூலம் அநீதிகளைக் களையவும், தனிநபர் சுதந்திரத்தை பாதுகாக்கவும், அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களை காக்கவும் முடியும். இவை அளிக்கும் மனநிறைவு அளப்பரியது.

இந்த வளாகத்தில் இருந்து வெளியேறும்போது, நீங்கள் ஒரு தொழிலில் மட்டுமல்ல; தனிநபர் உரிமைகளின் பாதுகாவலர்களாகவும் மக்களுக்கு சேவை ஆற்றுபவர்களாகவும் புதிய பொறுப்பில் அடியெடுத்து வைக்கிறீர்கள். சட்டம் உங்கள் பொறுமையையும் அறநெறியையும் சோதிக்கும். அதே நேரத்தில், ஓர் அநீதியைச் சரிசெய்வதற்கும், சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும், அரசமைப்பை நிலைநாட்டுவதற்கும் வாய்ப்பளிக்கும். இங்கிருந்து வெளியேறி உலகில் அடியெடுத்து வைக்கும் நீங்கள், சட்டப் பயிற்சியாளர்களாக மட்டுமன்றி, நம்பிக்கையை விதைப்பவர்களாகவும் செயல்பட வேண்டும் என்று நாடு எதிர்பார்க்கிறது.

உங்கள் தொழில்வாழ்க்கை சிறப்பானதாகவும், முயற்சிகள் பயனுள்ளதாகவும், பங்களிப்புகள் காலத்தால் நிலைத்திருப்பதாகவும் அமையட்டும்.

சட்டத் தொழிலில் ஈடுபடுவதைக் கடந்து, நாட்டுக்கும் சமூகத்துக்கும் பங்களிக்க வேண்டிய பரந்த பொறுப்பை மாணவர்கள் உணர வேண்டும் என்றார்.

இளம் வழக்குரைஞர்கள் கேள்வி கேட்பதை நிறுத்தக் கூடாது: முதல்வர் டி.கே.சிவகுமார்

நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் டி.கே. சிவகுமார் கூறியதாவது:

ஜனநாயகத்தைப் பாதுகாப்பது, அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களைக் காப்பதில் இளம் வழக்குரைஞர்களுக்கு முக்கியப் பொறுப்பு உள்ளது. ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசைக் கேள்வி கேட்கும் சுதந்திரம் இருக்கும் அமைப்பே வலுவான ஜனநாயகமாகும். இளம் வழக்குரைஞர்கள், கேள்வி கேட்பதை ஒருபோதும் நிறுத்தக்கூடாது. உங்கள் கொள்கைகளில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. அதே நேரத்தில், பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த விழாவில் கர்நாடக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி விபு பக்ரூ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

உத்தரகண்ட் பெண் அமைச்சர் புகார் கணவரை விசாரிக்க எஸ்ஐடி அமைப்பு

டேராடூன், அக். 17: கணவர் தன்னை துன்புறுத்துவதாக உத்தரகண்ட் மாநில மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரேகா ஆர்யா அளித்த புகாரை விசாரிக்க 9 நபர் கொண்ட சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சனிக்கிழமை தெரிவித்தனர்.

முன்னதாக, தன்னை உடல்ரீதியாக துன்புறுத்துவதாகவும், ஜாதிய ரீதியில் இழிவாகப் பேசுவதாகவும், கொலை மிரட்டல் விடுப்பதாகவும் கணவர் கிரிதாரி லால் சாஹு மீது காவல் நிலையத்தில் ரேகா ஆர்யா புகார் அளித்தார். கணவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி ரேகா ஆர்யா சமூக ஊடகத்தில் விடியோவும் பதிவிட்டார்.

இதனடிப்படையில் டேராடூனில் உள்ள கண்ட் காவல் நிலையத்தில், பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் பிற சட்டங்களின் கீழ் சாஹு மீது கடந்த வியாழக்கிழமை வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, தன் மீதான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனக் கூறி கடந்த வெள்ளிக்கிழமை விடியோ வெளியிட்ட கிரிதாரி லால் சாஹு, மனைவி ரேகா ஆர்யா சட்டவிரோதமாக ரூ.210 கோடி மதிப்பிலான சொத்துகளை வைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டினார். மேலும், இது குறித்து உத்தரகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி உடனடியாக விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இருப்பினும், ரேகா ஆர்யா மீதான குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் ஆவண ஆதாரங்களை கிரிதாரி லால் சாஹு சமர்ப்பிக்கவில்லை.

இந்நிலையில், ரேகா ஆர்யா அளித்த புகாரை விசாரிக்க காவல் துறை கண்காணிப்பாளர் ஜெயா பலோனி தலைமையில் 9 பேர் கொண்ட எஸ்ஐடி அமைக்கப்பட்டதாக அதிகாரிகள் சனிக்கிழமை தெரிவித்தனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ரேகா ஆர்யா வீடு திரும்பியவுடன் உடனடியாக இந்த விவகாரத்தில் விசாரணை முடிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, ரேகா ஆர்யா மற்றும் கிரிதாரி லால் சாஹு ஆகிய இருவரும் பரஸ்பரம் சுமத்திய குற்றச்சாட்டுகளை மாநில அரசு விரைந்து விசாரிக்க வேண்டுமெனவும், அமைச்சராக உள்ள ரேகா ஆர்யா பதவி விலக வேண்டுமெனவும் உத்தரகண்ட் மாநில காங்கிரஸ் தலைவர் கணேஷ் கோடியால் கடந்த வெள்ளிக்கிழமை வலியுறுத்தினார்.

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் வசூல் மேலாண்மைக் கிளை (ARMB), எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018.
போன் : 0422 2231314, 0422-2231345, மொபைல் : 9963993409, மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 26.11.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)
முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 26.11.2026, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.
பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் :
1. ஆவண எண்.37/2023/நீதிமன்ற உத்தரவுகள்/பதிவு தேதி : 13.12.2023/திரு.D.சசிகுமாருக்கு எதிராக வழங்கப்பட்டது (தொட்டிபாளையம் சார் பதிவக 15.10.2026 நாளிட்ட வில்லங்கச் சான்றின் படி).
2. கோயம்புத்தூர், கடன் மீட்பு தீர்ப்பாயத்தின் OA/224/2024.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

லாட் எண்.	கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் /கொள்நிலை/ ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
1	**கிளை : திருப்பூர் (ID 055810) (தற்போது கோயம்புத்தூர் ARMB-க்கு மாற்றப்பட்டுள்ளது)** **M/s.DSP கிரியேசன்ஸ்** **கடன்தாரர் : M/s.DSP கிரியேசன்ஸ்**, 2-572, A4, விருப்ப கவுண்டன்பாளையம், முதலிபாளையம், திருப்பூர் - 641 506. **கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் : திரு.D.சசிகுமார், (M/s.DSP கிரியேசன்ஸ்-ன் உரிமையாளர்)**, கதவு எண்.1/364(4), T.நகர் அஞ்சல், வெள்ளக்காடு, முதலிபாளையம், திருப்பூர் - 641 506. **கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் : திருமதி.S.பத்மினி**, கதவு எண்.1/364(4), T.நகர் அஞ்சல், வெள்ளக்காடு, முதலிபாளையம், திருப்பூர் - 641 506.	**(அட்டவணைச் சொத்து) : திரு.D.சசிகுமார் (PAN NO BQGPS0102Q) மற்றும் திருமதி.S.பத்மினி (PAN NO EXPPP1549K) ஆகியோர் பெயரிலுள்ள சொத்து :** திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிபாளையம் சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு தாலூகா, முதலிபாளையம் கிராமம், சர்வே எண்.399, இதிலமைந்த 3.13.0 ஹெக்டேர் புஞ்சை இதற்கு 7.74 ஏக்கர் புஞ்சை கிஸ்தி ரூ.4.37, இதில் 'ஸ்ரீ அனுபவ் ரெசிடென்சி' என்கிற பெயரில் வீட்டு மனையிடங்கள் பிரிக்கப்பட்டு, கோயமுத்தூர் மண்டல நகரத் திட்டத் துறையிடமிருந்து (DTCP) எண்.18/2014ல் அங்கீகாரத்தைப் பெற்றதில், அதில் லே.அவுட் பிளானின்படி மனை எண்.4ன் கிழபுற பகுதிக்கு **எல்லைகள் விபரம் :** 30 அடி அகல கிழமேல் லே.அவுட் ரோட்டுக்கு வடக்கு, சர்வே எண்.413 ல் உள்ள சொத்துக்குத் தெற்கு, மனை எண்.4 ன் மேற்புற பகுதிக்குக் கிழக்கு, மனை எண்.3 க்கு மேற்கு. இதன் மத்தியில், **அளவுகளாக :** கிழமேல் இருபுறமும் - 25 அடி, தென்வடல் கிழபுறம் 43 அடி, தென்வடல் மேற்புறம் - 44 அடி, மொத்தம் 1087 ½ சதுரடி அல்லது 101.03 சதுர மீட்டர் நிலம், லே.அவுட்டின் ரோடுகளில் வழக்கமான வழித்தட உரிமைகளுடன். சொத்தானது நடப்பு உட்பிரிவு சர்வே எண்.399/1A, நடப்பு உட்பிரிவு எண்.399/1A1A ல் அமைந்துள்ளது. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 11.1046000 N, 77.4277390 E**	அ) 24.04.2023 ஆ) (i) **ரூ.49,70,177.45 - (கணக்கு எண். 05581132001517) (பேக்கிங் கிரெடிட் மீதான வட்டி செலவுகள்)** (ii) **ரூ.12,59,317.19 - (கணக்கு எண். 055810EG00000058)** (iii) **ரூ.5,00,000.00 - (கணக்கு எண். 05588511004212)** **ஆக மொத்தம் ரூ.67,29,494.64 (ரூபாய் அறுபத்து ஏழு லட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து நானூற்று தொண்ணூற்று நான்கு மற்றும் பைசா அறுபத்து நான்கு மட்டும்) 30.09.2026 தேதி வரை** மற்றும் பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். இ) **11.08.2023** (அடையாளம்) ஈ) கொள்நிலை	1) **ரூ.30,60,000/-** (ரூபாய் முப்பது லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) 2) **ரூ.3,06,000/-** (ரூபாய் மூன்று லட்சத்து ஆறாயிரம் மட்டும்) 3) **ரூ.20,000/-** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 26.11.2026, (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

மின்-ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்
இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **26.11.2026, (வியாழக்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 16.10.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)-ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

SBI பாரத ஸ்டேட் பாங்கு
ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளை (10204), கோயம்புத்தூர்
எண்.377/1, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
N.S.பழனியப்பா நர்சிங் ஹோம் பின்புறம், கோயம்புத்தூர் - 641 018.
போன் : 0422-2233450, மின்னஞ்சல் : sbi.10204@sbi.co.in

அதிகாரம் பெற்ற அலுவலர்
திரு. R.ராஜகோபாலன்
மொபைல் : 90045 78960
தொடர்புக்கு : சரவணன்.R.L
மொபைல் : 99948 52645

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான, விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ், அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பாரத ஸ்டேட் பாங்குவின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்கள், மேற்படி வங்கி, கோயம்புத்தூர், ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளைக்கு வரவேண்டிய கீழே சம்பந்தப்பட்ட கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் பின்வட்டி, பிற செலவுகளை கீழ்க் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்கு அடமானப்படுத்தப்பட்ட **கொள்நிலை (physical) சுவாதீனம்** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை **24.11.2026** அன்று விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'எங்கு உள்ளதோ அதே நிலையில்' 'என்ன உள்ளதோ அதன்படி' மற்றும் 'எப்படி உள்ளதோ அதே நிலையில்'** விற்கப்படும்.

கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி : M/s.போர்ட்சீ டெக்னாலஜீஸ், உரிமையாளர் : திரு.செல்லமுத்து குணசேகரன், S.F.243/2, 16/1, இரா.மோகன் நகர், காளப்பட்டி-சித்ரா ரோடு, கோயம்புத்தூர் - 641 048, **திரு.G.செல்லமுத்து**, த/பெ.திரு.குணசேகரன், **M/s.போர்ட்சீ டெக்னாலஜீஸ்-ன் உரிமையாளர்**, 2/174, பாலசுந்தரம் லேஅவுட், செட்டிபாளையம் ரோடு, LLN மருத்துவமனை எதிரில், மலுமிச்சம்பட்டி, கோயமுத்தூர் - 641 050, **திரு.G.செல்லமுத்து**, த/பெ.திரு.குணசேகரன், **M/s.போர்ட்சீ டெக்னாலஜீஸ்-ன் உரிமையாளர்**, கிழக்குத் தெரு, தப்புகுண்டு, தாடிச்சேரி, தேனி - 625 534, **திரு.சிகாமணி என்கிற P.கருப்பண்ணன், உத்தரவாதமளித்தவர் : M/s. போர்ட்சீ டெக்னாலஜீஸ்**, எண்.23, அய்யா முத்தையன் காடு, ரெட்டிபாளையம் கிராமம், ஊத்துக்குளி தாலூகா, திருப்பூர் மாவட்டம் - 641 601.
11.10.2026 வரை நிலுவைத் தொகை : ரூ.8,03,09,646/- (ரூபாய் எட்டு கோடியே மூன்று லட்சத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஆறு மட்டும்) மற்றும் **12.10.2026** தேதியிலிருந்து பின் வட்டி மற்றும் பிற செலவுகள்.

அசையாச் சொத்துக்களின் விவரம்

சொத்து எண்.1 : (திரு.P.சிகாமணி என்கிற திரு.கருப்பணனுக்குச் சொந்தமான சொத்து, ஊத்துக்குளி சார் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட சொத்து, 06.04.2018 தேதிய தானத்தீர்வு ஆவண எண்.1021/2018க்கு உட்பட்டது) : திருப்பூர் பதிவு மாவட்டம், ஊத்துக்குளி சார் பதிவு மாவட்டம், ஊத்துக்குளி தாலூகா, ஊத்துக்குளி பேரூராட்சி எல்லைக்குள், புன்செய் ஊத்துக்குளி கிராமம், நேதாஜி வீதி, வார்டு எண் 7, மறுசர்வே எண்.202/1ல் உள்ள 0.945 எக்டர் தீர்வை ரூ.2.53, (புதிய மறு சர்வே எண்.202/1A, 1B), மறுசர்வே எண்.202/2ல் உள்ள 0.340 எக்டர் தீர்வை ரூ.0.94 (புதிய மறு சர்வே எண்.202/2B, உட்பிரிவின் பின்னர் மறுசர்வே எண்.202/2B5). ஆக மொத்தம் 1.285 எக்டர் தீர்வை ரூ.3.47ல் குறிப்பிட்ட 3745 சதுர அடி அல்லது 348 சதுர மீட்டர் நிலத்தின் **எல்லைகள் வருமாறு :** 16 அடி அகல கிழமேல் தடத்துக்கு வடக்கு, 16 அடி அகல தென்வடல் தடத்துக்குக் கிழக்கு, சந்திரசேகரன் மற்றும் பிறருக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, சந்திரகலாவுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு. இதன் நடுவே கிழமேல் 70 அடி இருபுறமும், தென்வடல் 53.5 அடி ஆக மொத்தம் 3745 சதுர அடி (அல்லது) 348 சதுர மீட்டர் நிலமும், சொத்தினைச் சென்றடையும் மாமூல் தடவழி உரிமைகளும், பொருத்தப்பட்டவைகளும், இணைப்புகளும் உள்ள சொத்து. **(விரிவான விவரங்கள் ஆவண எண் 1021/2018ல் உள்ளது).**

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.40,00,000/- முன்வைப்புத் தொகை : ரூ.4,00,000/- ஏல உயர்வு மடங்கு : ரூ.50,000/-

சொத்து எண்.2 : (திரு.P.சிகாமணி என்கிற திரு.கருப்பணனுக்குச் சொந்தமான சொத்து, ஊத்துக்குளி சார் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட சொத்து, 09.01.2019 தேதிய தானத்தீர்வு ஆவண எண்.705/2019க்கு உட்பட்டது) : இனம் 1 (திரு.P.சிகாமணி என்கிற திரு.கருப்பணனுக்குச் சொந்தமான சொத்து) : திருப்பூர் பதிவு மாவட்டம், ஊத்துக்குளி சார் பதிவு மாவட்டம், ஊத்துக்குளி தாலூகா, புன்செய் ஊத்துக்குளி கிராம மறுசர்வே எண்.107ல் உள்ள 2.145 எக்டர் தரம் ரூ.7.25, மறுசர்வே எண்.108/2ல் உள்ள 1.945 எக்டர் தரம் ரூ.3.93 ஆக மொத்தம் 4.090 எக்டர் தீர்வை ரூ.11.18 (பழைய பொது சர்வே எண்கள் 21 மற்றும் 22, பாப்பான்காடு) இதனுட்பட்ட 1.45 ஏக்கர் (அ) 0.585 எக்டர் நிலத்தின் **எல்லைகள் :** மறு சர்வே எண்கள் 115 மற்றும் 108/3 நிலத்துக்கு வடக்கு, மறுசர்வே எண்.108/1ல் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கிழக்கு, சிவசங்கர், பிரேம்குமாருக்குச் சொந்தமான பிற நிலங்கள் மற்றும் ராமசாமி, R.K.நந்தகுமாருக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, கருப்பணகவுண்டருக்குச் சொந்தமான நிலம் மற்றும் 23 லிங்க் அகல கிழமேல் தடம் மற்றும் சிகாமணி (எ) P.கருப்பணனுக்குச் சொந்தமான 1.50 ஏக்கர் நிலத்துக்கு மேற்கு. இதன் நடுவே உள்ள 1.45 ஏக்கர் அல்லது 0.585 எக்டர் நிலம் தீர்வை ரூ.1.62. மேலும் 23 லிங்க் அகல கிழமேல் தடம் இதே மறுசர்வே எண்.107 மற்றும் 108/2ல் ஒதுக்கப்பட்டதன் **எல்லைகள் வருமாறு :** சிகாமணி (எ) பெரிய கருப்பணனுக்குச் சொந்தமான 1.05 ஏக்கர் நிலத்துக்கு வடக்கு, மேலே சொல்லப்பட்ட 1.45 ஏக்கர் நிலத்துக்குக் கிழக்கு, இதே சர்வே களங்களில் P.கருப்பணகவுண்டர் வாங்கிய 0.97 ஏக்கர் நிலத்துக்குத் தெற்கு, ஊத்துக்குளி - அய்யம்பாளையம் தென்வடல் ரோட்டுக்கு மேற்கு. இதனுட்பட்ட 0.14½ ஏக்கர் அல்லது 0.055 எக்டர் ரூ.0.20 நிலத்தில் பொதுவான பாதிபங்கு 0.07¼ ஏக்கர் அல்லது 0.030 எக்டர். ஆக மொத்தம் 1.52¼ ஏக்கர் நிலம் வீட்டுமனைகள் பல கொண்ட ஒரு வீட்டுமனையாக அபிவிருத்திச் செய்யப்பட்டு சேலம் மண்டல நகர் மற்றும் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் கடித எண்.DTCP.16055/2018 நாள் 01.11.2018ன் படியும் மேலும் ஊத்துக்குளி பேரூராட்சி செயல் அலுவலர் கடித எண். ந.க.எண். 121/2018 நாள் 20.11.2018ன் படியும் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிலத்தின் வரைபடத்திட்டப் படியான i) மனை எண்.1ல் மறுசர்வே எண்.108/2ல் உள்ள 3703¾ சதுர அடி நிலத்தின் **எல்லைகள் வருமாறு :** 25 அடி அகல கிழமேல் லே அவுட் ரோட்டுக்கு வடக்கு, மறுசர்வே எண்.108/1ல் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கிழக்கு, சிவசங்கர் மற்றும் பிரேம்குமாருக்குச் சொந்தமான பிற நிலம் மற்றும் P.ராமசாமி, R.K.நந்தகுமாரனுக்குச் சொந்தமான நிலங்களுக்குத் தெற்கு, மனை எண்கள்.2, 9, 10ல் உள்ள நிலங்களுக்கு மேற்கு. இதன் நடுவே கிழமேல் வடபுறம் 40 அடி, தென்புறம் 34 அடி 9 அங்குலம், தென்வடல் கிழபுறம் 98 அடி 9 அங்குலம் மற்றும் மேல்புறம் 98 அடி 9 அங்குலம் ஆக மொத்தம் 3703¾ சதுர அடி நிலம். ii) மேலும் இதே மனை பிரிவில் மறுசர்வே எண்.108/2ல் உள்ள மனை எண்கள் 3, 8, 11 ஆகியவற்றிலுள்ள மொத்தம் 5913 சதுர அடி நிலத்தின் **எல்லைகள் வருமாறு :** 25 அடி அகல கிழமேல் லேயவுட் ரோட்டுக்கு வடக்கு, 23 அடி அகல தென்வடல் லேயவுட் ரோட்டுக்குக் கிழக்கு, சிவசங்கர் மற்றும் பிரேம்குமாருக்குச் சொந்தமான பிற நிலங்கள் மற்றும் P.ராமசாமி, R.K.நந்தகுமாரனுக்குச் சொந்தமான நிலங்களுக்கு தெற்கு, மனை எண்கள் 4, 7 மற்றும் 12ல் உள்ள நிலங்களுக்கு மேற்கு. இதன் நடுவே கிழமேல் வடபுறம் 60 அடி, தென்புறம் 60 அடி, தென்வடல் கிழபுறம் 98 அடி 3 அங்குலம், மேல்புறம் 98 அடி 6 அங்குலம் ஆக மொத்தம் 5913 சதுர அடி நிலம். iii) மேலும் இதே மறுசர்வே எண்.108/2ல் லே அவுட் மனை எண்.5ல் உள்ள 1674 சதுர அடி நிலத்தின் **எல்லைகள் வருமாறு :** மனை எண்.6 நிலத்துக்கு வடக்கு, 23 அடி அகல தென்வடல் லே அவுட் ரோட்டுக்குக் கிழக்கு, சிவசங்கர் மற்றும் பிரேம்குமாருக்குச் சொந்தமான பிறிதொரு நிலம் மற்றும் P.ராமசாமி, R.K.நந்தகுமாரனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, கருப்பணகவுண்டர் வாங்கிய நிலம் மற்றும் 23 லிங்க் அகல கிழமேல் தடம் மற்றும் சிகாமணி (எ) கருப்பணன் வாங்கிய 1.05 ஏக்கர் நிலத்துக்கு மேற்கு. இதன் நடுவே கிழமேல் வடபுறம் 60 அடி, தென்புறம் 60 அடி, தென்வடல் கிழபுறம் 27 அடி 9 அங்குலம், மேல்புறம் 27 அடி 9 அங்குலம் ஆக உள்ள 1674 சதுர அடி நிலம். iV) மேலும் மறு சர்வே எண்.108/2 ல் உள்ள அதே லே.அவுட் நிலம் மனை எண்.14 க்குரிய 9194 சதுரடிக்கு **எல்லைகள் :** மறு சர்வே எண்கள் 115 மற்றும் 108/3 ல் உள்ள நிலங்களுக்கு வடக்கு, மனை எண்கள் 15 மற்றும் 18 க்குக் கிழக்கு, 25 அடி அகல கிழமேல் லே.அவுட் ரோட்டுக்குத் தெற்கு, கருப்பண கவுண்டர் வாங்கிய நிலத்துக்கு மற்றும் 23 லிங்க்ஸ் அகல கிழமேல் வழித்தடத்துக்கு மற்றும் சிகாமணி என்கிற கருப்பணன் வாங்கிய 1.05 ஏக்கர் நிலத்துக்கு மேற்கு. இதன் மத்தியில் கிழமேல் வடபுறம் 93 அடி, தென்புறம் 105 அடி, தென்வடல் கிழபுறம் 98 அடி 5 அங்குலம், மேல்புறம் 89 அடி 3 அங்குலம் ஆக உள்ள 9194 சதுர அடி நிலம். V) மேலும் மறுசர்வே எண் 108/2ல் இதே லேயவுட்டில் மனை எண் 18ல் உள்ள 2043¾ சதுர அடி விஸ்தீரண நிலத்தின் **எல்லைகள் :** மறுசர்வே எண் 115 மற்றும் 108/3 நிலங்களுக்கு வடக்கு, 23 அடி அகல தென்வடல் லேயவுட் ரோட்டுக் கிழக்கு, மனை எண்.15 நிலத்துக்குத் தெற்கு, மனை எண் 14 நிலத்துக்கு மேற்கு. இதன் நடுவே கிழமேல் வடபுறம் 60 அடி, தென்புறம் 62 அடி 6 அங்குலம், தென்வடல் கிழபுறம் 49 அடி 6 அங்குலம் மற்றும் மேல்புறம் 27 அடி ஆக மொத்தம் 2043¾ சதுர அடி நிலம். பின்னரும் மறுசர்வே எண்.108/2ல் இதே லே அவுட் மனை எண்கள் 16 மற்றும் 17ல் உள்ள மொத்தம் 3810¼ சதுர அடி விஸ்தீரண நிலத்தின் **எல்லைகள் வருமாறு :** மறுசர்வே எண்கள் 115 மற்றும் 108/3ல் உள்ள நிலங்களுக்கு வடக்கு, மறுசர்வே எண் 108/1ல் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கிழக்கு, 25 அடி அகல கிழமேல் லேயவுட் ரோட்டுக்குத் தெற்கு, 23 அடி அகல தென்வடல் ரோட்டுக்கு மேற்கு. இதன் நடுவே கிழமேல் வடபுறம் 93 அடி 9 அங்குலம், தென்புறம் 97 அடி 6 அங்குலம், தென்வடல் கிழபுறம் 59 அடி 3 அங்குலம் மற்றும் மேல்புறம் 20 அடி 6 அங்குலம் ஆக மொத்தம் 3810¼ சதுர அடி நிலம். ஆக மொத்த நிலம் 26338 ¾ சதுர அடி உடன் 23 லிங்க் அகல ரோட்டின் உபயோக உரிமையுடன் பிற அனைத்து உரிமைகள் முதலியன சேர்ந்தது. மனை எண்.1 - 3703.75 சதுர அடி; மனை எண்கள் 3, 8, 11 - 5913 சதுர அடி; மனை எண்.5 - 1674 சதுர அடி; மனை எண்.14 - 9194 சதுர அடி, மனை எண்கள் 16, 17 - 3810.25 சதுர அடி; மனை எண்.18 - 2043.75 சதுர அடி. ஆகமொத்தம் : 26338.75 சதுர அடி. **(விரிவான விவரம் ஆவண எண்.705/2019ல் உள்ளது).**

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.1,60,00,000/- முன்வைப்புத் தொகை : ரூ.16,00,000/- ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/-

மின்-ஏல விற்பனை விபரம் :
வங்கிக்குத் தெரிந்தவரை வில்லங்க விபரம் : இல்லை. எனினும் வருங்கால ஏலதாரர்கள் இது குறித்து தங்கள் சொந்த விசாரணையை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்-ஏலத் தேதி மற்றும் நேரம் : 24.11.2026 (செவ்வாய்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
(ஏலம் தொடரும்பட்சத்தில் அது நிறைவு பெறும் வரைக்குமான 10 நிமிட அளவற்ற நீட்டிப்புகளுடன்)

சொத்தினை பார்வையிடுதல் : 11.11.2026 (புதன்கிழமை), காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை.

EMD க்கான சான்று சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி : விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலம் மூடுவதற்கு முன்பாக, முன் ஏல முன்வைப்புத் தொகையை https://baanknet.com/eauction-psb/home ல் செலுத்தலாம்.

முன்வைப்புத் தொகை (EMD) NEFT மூலமாக PSB Alliance Baanknet -ல் வரவு வைக்கப்பட வேண்டும். (இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள நிபந்தனை விபரங்களில் எண்.13-b ஐ பரிசீலிக்கவும்).

முன் ஏல குறைந்தபட்ச வைப்புத் தொகையான நிர்ணய விலையில் 10% தொகை ஏலம் கோர விரும்பும் ஏலதாரர்களால் https://baanknet.com/eauction-psb/home யின் உலகளாவிய குறைந்தபட்ச வைப்புத் தொகை பணக் கணக்கிற்கு (Global EMD wallet) நிதி பரிமாற்றம் மூலம் டெபாசிட் செய்யப்பட வேண்டும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலம் மூடுவதற்கு முன்பாக, முன் ஏல முன்வைப்புத் தொகையை PSB Alliance Baanknet-ல் செலுத்தலாம். PSB Alliance Baanknet ன் வங்கிக் கணக்கில் செலுத்திய தொகை பெற்றுக் கொள்ளப்பட்டு, இது குறித்த தகவல் மின்-ஏல இணையதளத்தில் வெளியிடப்பட்ட பின்னர் மட்டுமே, முன் ஏல முன்வைப்புத் தொகை வரவு ஏலதாரருக்கு வழங்க இயலும். இது சம்பந்தமான வங்கியின் செயல்பாடுகளுக்கு சிறிது கால அவகாசம் எடுத்துக் கொள்ளப்படுவதால், கடைசி நேர இடைஞ்சல்களைத் தவிர்க்க, ஏலதாரர்கள் ஏல முன்வைப்புத் தொகையினை முன்னதாகவே சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த ஏலமானது **https://baanknet.com/eauction-psb/home.** இணையதளம் மூலமாக ஆன்லைனில் மட்டுமே நடத்தப்பெறும். **இதன் செயல்முறைகளுக்கு குறைந்தது இரண்டு முதல் மூன்று வேலை நாட்கள் எடுத்துக் கொள்ளப்படுவதால், ஏலதாரரின் பதிவு மின்-ஏலத் தேதிக்கு நன்கு முன்னதாக ஏலதாரரால் செய்து முடித்துக் கொண்டிருக்கப்பட வேண்டும்.**

மின்-ஏல விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு, மின்-ஏலத்தின் போர்டலில் பதிவு செய்து கொள்வதைத் தொடர்வதற்கு மற்றும் ஆன்லைன் மின்-ஏல விண்ணப்பப் படிவம், உறுதிமொழி முதலியவை அடங்கிய மின்-ஏல டெண்டர் ஆவணத்திற்கு, கீழ்க்கண்ட இணையதளத்தில் உள்ள 'லிங்க்'கினைப் பார்வையிடலாம். **https://baanknet.com/eauction-psb/home**

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 12.10.2026

அதிகாரம் பெற்ற அலுவலர்
பாரத ஸ்டேட் பாங்கு,
ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளை, கோயம்புத்தூர்